**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | முடிசூடியநாதன் | Prosecution | P.W-9 LW-14 |
| Father Name | பெரியசாமி | Court | JM, Court, Sirkali. |
| Address | குளக்கரை காலனி, திட்டை ரோடு | Taluk | சீர்காழி |
| Age | 34/2025 | Calling | |

Solemnly affirmed by Tmt.R.Geetha, Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**14.05.2025.**

<u>சத்தியபிரமாணம் பெறப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை</u>**

1. கடந்த 20.01.2025 ம் தேதியன்று எனது வீட்டுக்கு எதிர் வீட்டில் வசிக்கும் சிவசந்திரன் என்கிற நபருக்கு தென்பாதி பகுதியில் உள்ள ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் வைத்து நிஷாந்தினி என்பவரோடு திருமணம் நடைபெற்றது. அதன் பிறகு மேற்படி சிவச்சந்திரனை அந்த பெண்மணி தன்னை மருத்துவர் என்று சொல்லிக்கொண்டு ஏமாற்றி திருமணம் செய்து கொண்டதாக எனக்கு தெரிய வந்தது. மேற்படி விவரத்தை பற்றி சிவச்சந்திரனே என்னிடம் தொலைபேசி மூலமாக தெரிவித்து அது சம்பந்தமாக மேல் நடவடிக்கை எடுக்க காவல் நிலையம் வருமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி கடந்த 23.01.2025ம் தேதியன்று நான் சீர்காழி மகளிர் காவல் நிலையத்திற்கு சென்றேன். அப்போது அது பற்றி போலீசார் விசாரித்தார்கள். அந்த சமயத்தில் புத்தூர் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரும் காவல் நிலையத்திற்கு வந்தார். அவர் போலீசாரிடம் தன்னையும் அந்த பெண்மணி திருமணம் செய்து ஏமாற்றி விட்டதாக குறிப்பிட்டார்.

2.போலீசார் அது சம்பந்தமாக எங்களை விசாரணை செய்து சாட்சி கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படும் இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான்.

(மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) நடந்தது இதுதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலீசார் என்னிடம் வெற்று காகிதத்தில் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த காகிதத்தில் விவரங்கள் எழுதப்பட்டிருந்தது. அதில் இரண்டாவதாக நான் கையொப்பம் செய்தேன். மேற்படி காகிதத்தில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.. ஏனெனில் நான் அதனை படித்துப் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்துதான் நான் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். என்னோடு கையொப்பம் செய்த மற்றொரு நபரும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம். நானும் புகார் தாரர் சிவச்சந்திரனும் மற்றும் இன்னுமொரு கையெழுத்து செய்த சுந்தர்ராஜன் என்பவரும் ஒரே ஊர்காரர்களா என்றால் ஆமாம். சிவச்சந்திரன் என்னை அழைத்ததால் தான் நான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தகவலும் அவர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தற்போது சொன்ன அதே சங்கதிகளை தான் போலீசார் என்னை விசாரித்த போதும் சொன்னேனா என்றால் ஆமாம். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவுமே தெரியாது என்றாலும் எனது எதிர் வீட்டுக்காரர் சிவச்சந்திரன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் புகார்தாரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது</u>**

**மறுவிசாரணை இல்லை.**